முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1266

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.03.2023, சனிக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அவதார யோகியே தேசிகா
ஆறுமுகனார் என்சூட்சும வடிவாகவும் அன்னதானத்தின் மகா சக்தியாகவும்
கலியுகத்தைக் காக்கவந்த ஞான தேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 04 ம் நாள், 18.03.2023, சனிக்கிழமை)
வானவர்கள் போற்றும் தர்மத்தை
வையகத்தில் இலகுவாக சேவையாக ஆற்றி
3. ஆற்றியே உலகமெல்லாம் பசிபிணி விரட்டி
அற்புதத்தை நடத்துகின்ற குருஅரங்கனே
அரங்கனே நீயே கலியின் சிறந்த ஞானி
அரங்கனே உன் தர்மமே கலியின் சிறந்த தர்மம்
4. வரமென உன்வழி உலகம் வந்தால்
வையகத்துக்கு பெரிய பாதுகாப்பு உண்டாகும்
தரமான உன் தொண்டர்படைகளை உலகமெங்கும் பெருக்கினால்
தரணிக்கே ஞான ஆட்சி உறுதியாகும்
5. ஆகவே அரங்கன் சொல் செயல் கேட்டு
அகிலத்தில் நடக்கும் மக்களெல்லாம்
வரமென ஆறுமுகன் என் அருள் தயவு பெற்று
வள்ளலாக வாழும் காலமே பிறவி சூட்சும இரகசியம்
6. இரகசியமோடு சர்வ தெளிவும் ஞானபலமும் கூடி வாழ நேரும்
தரணியில் அரங்கன் தர்மமே தலையாய தர்மமாக விளங்கி நிற்க
அறமெனும் மார்க்கத்தில் கடைத்தேற விரும்புபவர்
அரங்கன் குடில் நோக்கி வந்து
7. வந்துமே அரங்கன்பால் சரணாகதி
வாழவை என முழுமைபட கொண்டு
சரவணச்சுடரேற்றி தொடர்ந்தால்போதும்
சகலருக்கும் ஞான சித்தி உறுதியாகும்
8. உறுதிபட ஞானங்கள் சித்தியாக
உலகோரெல்லாம் ஞானவான்களாக மாறி
ஆறுமுக அரங்கன் தயவாலே
அகிலத்தில் ஞான ஆட்சி மலரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–